# NEWS LETTER

## Contact Us !

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.

Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

Vivekananda Community Foundation



# விவேகானந்த தொழில்நுட்வியல் கல்லூரியினரின் வாணிவிழா

விவேகானந்த தொழில்நுட்வியல் கல்லூரியில் விவேகானந்த குடும்பத்தினரின் வாணிவிழா விமர்சையாக கொண்டாடப்பட்டது. கல்லூரியின் நிறைவேற்று பணிப்பாளர் திரு.க.பிரதீஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கல்லூரி முதல்வர் உள்ளிட்ட கல்லூரியின் வளவாளர்கள், போதனாசிரியர்கள் சேவையாளர்கள் உள்ளடங்கலாக கல்லூரியின் பயிலுனர்களும் கலந்து கொண்டனர்.

கல்வியில் மாத்திரமன்றி வெளிக்கள செயற்பாடுகளிலும் பயிலுனுர்களை மேம்படுத்தும் வண்ணம் Carom, Chess, Archery போன்ற செயற்பாடுகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.












Support for
20 Students
in Puhalidam

per Pack –
**LKR 3,500**

ஆரையம்பதியில் அமைந்துள்ள விசேட தேவையுடையவர்களுக்கான நிலையமான புகலிடத்தினை எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் பயிலுனர்கள் சென்று பார்வையிட்டதோடு அங்குள்ள விசேட தேவையுடைய சிறுவர்கள் அனைவருடனும் கலந்துரையாடி அவர்களது அனுபவங்களை கேட்டு அறிந்து கொண்டனர்.

இந்த உலகில் முழுமை என்ற ஒன்று இல்லை என்பதை தாண்டி நாம் அனைவரும் விசேட தேவையுடையவர்களுக்குச் செய்யும் உதவிகள் அன்றைய தினம் அவர்களுக்கு போதுமானதாக இருக்கலாம். ஆனாலும், அவர்கள் தங்களுடைய முயற்சியால் தங்களுக்கான வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்கு வழிகாட்டுதல் என்பதே நாம் அவர்களுக்கு செய்யும் மிகப்பெரிய ஜீவகாருண்யமாகும்.

## சர்வதேச ஆசிரியர் தினம் மற்றும் சிறுவர் தினம்

சர்வதேச ஆசிரியர் தினம் மற்றும் சிறுவர் தின நிகழ்வானது அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் தலைவர் பொன். பேரின்பநாயகம் ஐயா அவர்களின் தலைமையில் அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தில் சிறப்பாகக் கொண்டாப்பட்டது. இந்நிகழ்வில் அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் நிர்வாக உறுப்பினர்கள், முகாமையாளர், உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் கைவேலி பாடசாலை அதிபர் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இந்நிலையத்தில் இருந்து முதல் தடவையாக பல்கலைக்கழகம் செல்லும் மாணவிகள் கௌரவிக்கப்பட்டதுடன் கடந்த ஆண்டுகளில் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி அடைந்த மாணவிகளும் கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்த ஆண்டு நிலையத்திற்கு மிக சிறப்பாக ஒழுங்காக வருகை தந்த பிள்ளைகள், கற்றலில் முன்பிருந்த நிலையினை விட தற்போது சிறந்த மாற்றத்தை பெற்ற ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள மாணவிகள், நிலையத்தின் செயற்பாடுகளுக்கு கட்டுப்பட்டு பிள்ளைகளின் வரவு வீதத்தில் கவனம் செலுத்தி நிலையத்திற்கு பிள்ளைகளை ஒழுங்காக அனுப்பிய பெற்றார்கள், பிள்ளைகளின் கற்றலில் அக்கறை செலுத்தி சிறந்த முன்னேற்றத்தை ஏற்படுத்திய பெற்றார்கள், சிறந்த ஆசிரியர் சேவைகளை செய்து கொண்டிருக்கும் ஆசிரியர்கள், முன்பு சாரதா நிலையத்தில் பணியாற்றி இடை விலகிய. முன்னாள் பணியாளர்கள் என அனைவரும் அவர்களது சேவையை பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.









## Careerfit & I't பயிற்சியினை பூர்த்தி செய்த பயிலுனர்களின் இறுதிக்கட்ட பயிற்சி அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்வு

விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் கொம்மாதுறை கிளையின் Careerfit & I't பயிற்சியினை பூர்த்தி செய்த முழுநேர மற்றும் பகுதி நேர பயிலுனர்கள் 23 பேருக்கான இறுதிக்கட்ட பயிற்சி அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்வு விவேகானந்த தொழில்நுட்பக் கல்லூரியின் கொம்மாதுறை கிளை பயிற்சி நிலையத்தில் நடைபெற்றதோடு இந்நிகழ்வில், விவேகானந்த தொழில்நுட்பக் கல்லூரியின் வளவாளர்கள் மதிப்பீடுகளை மேற்கொண்டதுடன், அனைத்து பயிலுனர்களும் சிறப்பான முறையில் தங்கள் இறுதிக்கட்ட அறிக்கையை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது..





## ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் நூலாசிரியர் சுவாமி அபவர்கானந்தஜி மகாராஜ் இன் கல்லூரி விஜயம்



இராமகிருஷ்ண மிஷனின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மட்டக்களப்பில் உள்ள ராமகிருஷ்ண மிஷனுக்கு, சென்னை மயிலாப்பூரிலிருந்து வருகை தந்த 'ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்' நூலின் ஆசிரியர் சுவாமி அபவர்கானந்தஜி மகாராஜ் எமது புதுக்குடியிருப்பு விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரிக்கு விஜயம் செய்து பார்வையிட்டதுடன், காரைதீவு, கொம்மாதுறை, கரடியனாறு நிலையங்களைச் சேர்ந்த பயிலுனர்களுடனும் கலந்துரையாடினார்.

ஆன்மிக வழியில் வாழ்க்கையை அமைப்பது பற்றியும் நம்மை நாமே உணர்தல், நேர முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் என அனைவருக்கும் பயன்தரும் வகையில் அவரது சொற்பொழிவு அமைந்திருந்தது.





## மரப்பாலம் கிராமத்தை சேர்ந்த 30 சிறுவர்கள் கல்லூரிக்கு வருகை









கிராமப்புறங்களில் உள்ள சிறுவர்களின் மத்தியில் IT அறிவு தொடர்பான ஆர்வத்தை தூண்டும் வண்ணம், தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்குடன் கணணிகள் மற்றும் தொழில்நுட்பகூடங்களை அறிமுகம் செய்யும் நோக்கிலான செயற்றிட்டம் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி மற்றும் சீயோன் child development இணைந்து முன்னெடுக்கப்பட்டது. மரப்பாலம் கிராமத்தை சேர்ந்த 30 சிறுவர்கள் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரிக்கு அழைத்துவரப்பட்டு கல்லூரியின் தொழில்நுட்ப ஆய்வுகூடம் மற்றும் அனைத்து செயற்பாடுகளையும் பார்வையிட்டதுடன் அது தொடர்பிலான தெளிவுபடுத்தல்கள் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் வளவாளர்களால் வழங்கப்பட்டது.

## அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் மாணவிகளின் தீபாவளித் திருநாள்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட, பின்தங்கிய பிரதேசத்தில் வாழும் 60 மாணவிகளை உள்ளடக்கியதாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தில் மாணவிகள் மற்றும் சேவையாளர்களால் தீபாவளித் திருநாளானது சிறப்பாக கொண்டாடப்பட்டது.

எமது அறக்கட்டளையின் புலம்பெயர் உறவாகிய கனடாவில் வசிக்கும் திருமதி மனோகரி அவர்களின் சகோதரி திருமதி கவிதா குடும்பத்தினர் (கனடாவை சேர்ந்தவர்) இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.





**Annai Sri Sarada Center**

**Support for 60 Students Special Meal per Day - LKR 40,000**

# TOP NEWS

## சேவையாளர்களுக்கான Healing to Empower பயிற்சிப்பட்டறை





மாணவர்களின் மனநிலையை அறிந்து ஆசிரியர்கள் மற்றும் வளவாளர்கள் அவர்களை எவ்வாறு கையாள்வது என்பது குறித்த செயலமர்வானது இந்தியாவிலிருந்து வருகை தந்த யுனைடட் போட் நிறுவனத்தின் ஒழுங்கமைப்பின் கீழ் 06.10.2025 தொடக்கம் 09.10.2025 வரை நடைபெற்றது. மட்டக்களப்பில் அமெரிக்கன் மிஷன் மண்டபத்தில் நான்கு நாட்கள் நடைபெற்ற இந்த செயலமர்வில் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் வளவாளர்கள், மியானி உறுப்பினர்கள், சென்ட் ஜோன்ஸ் உறுப்பினர்கள் உள்ளடங்கலாக 50 பங்குபற்றாளர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இந்தியாவில் இருந்து வருகை தந்த டாக்டர் சரினா மக்ஷரூப், டாக்டர் வீணா சதீஷ், ஜெலின் பால், ஷெரின் பெர்னாண்டோ ஆகியோர் கலந்துகொண்டு "Healing to Empower" என்ற தலைப்பில் 4 நாட்கள் செயலமர்வை மிக சிறப்பாக வழங்கியிருந்ததோடு பெரும்பாலும் Gen Z மாணவர்கள் மற்றும் அவர்களின் மனநலம், எதிர்காலத் திட்டமிடல் திறன்கள், கல்வி மற்றும் வாழ்க்கை சவால்களை சமாளிக்கும் முறைகள் மீது இருந்தது. மூன்று நாட்கள் நடைபெற்ற பயிற்சிகளில், மாணவர்களின் மனநிலை மேம்பாடு, உணர்ச்சிகளை கையாளல், ஆழமான கேள்வி கேட்கும் திறன், மனநலம் தொடர்பான பல்வேறு நோய்கள் மற்றும் சிக்கல்கள் குறித்த விழிப்புணர்வு ஆகியவை முக்கியமாக கையாளப்பட்டதோடு மனஅழுத்தம், நோய் எதிர்ப்பு, பாதுகாப்பு, கல்வி திறன் மேம்பாடு போன்ற பயிற்சிகளும் வழங்கப்பட்டன.






















## Mobile phone repairing  One-day workshop

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் mobile phone repairing One-day workshop இடம்பெற்றது. தொலைபேசியில் ஏற்படும் பொதுவான பழுதுகள், அவற்றை சரி செய்வதற்கு தேவையான கருவிகள், பாகங்கள் மாற்றும் முறைகள் ஆகியவை பயிலுனர்களுக்கு விரிவாக விளக்கப்பட்டன.

மேலும், இந்த பயிற்சி பட்டறை விரைவில் கல்லூரியில் தொடங்க உள்ள தொழில்முறை பயிற்சிநெறியின் அறிமுக செயல்பாடாகவும் அமைந்தது. இதன் மூலம் எதிர்காலத்தில் பயிற்சி பெறவுள்ள இளைஞர்கள் எதிர்காலத்தில் தங்கள் சொந்த தொழிலை ஆரம்பிக்கலாம் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை பெற வாய்ப்பாகவும் அமையும்.







**Sponsor a Youth**
**per Technician**
**- LKR 10,000**

## 2025 க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான வாழ்த்து நிகழ்வு

பாடசாலை சமூகங்களுடன் ஒருங்கிணைந்து மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக பல செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியானது மட்/பட்/களுதாவளை மகா வித்தியாலயம், வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம், செங்கலடி மத்திய கல்லூரி உள்ளடங்கலாக 2025 க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றும் 595 மாணவர்களுக்கான வாழ்த்து நிகழ்வில் கலந்துகொண்டதோடு பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களை வாழ்த்தி, பேனாக்களை வழங்கி வைத்தனர். மேலும், குறித்த பாடசாலைகளில் தற்போது பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு கடந்த காலங்களில் விவேகானந்த தொழில்நுட்பக் கல்லூரி ஊடாக செயலமர்வுகள் மற்றும் ஏனைய கல்வி செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# மாவிலங்கத்துறை மாணவர்களுக்கான சிங்கள மற்றும் ஆங்கில வகுப்புக்கள்



“கிராமங்களின் மாற்றத்திற்கான வலுவூட்டல்” என்னும் தொனிப்பொருளில் தெரிவு செய்யப்பட்ட மாவிலங்கத்துறை கிராமத்தில் உயர்தரம் கல்வி கற்கும் மாணவர்களிற்கான மாதாந்த உதவித்திட்டம், அடிப்படைக் கணிணி வகுப்புகள், அறநெறிக்கான அனுசரணை, வாழ்வியல் பயிற்சி செயலமர்வுகள் என எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில், எமது அறக்கட்டளையினூடாக திரு.சின்னத்தம்பி செந்தில்செல்வன் அவர்களின் அனுசரணையில் மாவிலங்கத்துறை கிராமத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆங்கில மற்றும் சிங்கள வகுப்புக்களை மேற்பார்வை செய்வதற்கான களவிஜயம் எமது குழுவினரால் மேற்கொள்ளப்பட்டதோடு மாவிலங்கத்துறை சித்தி விநாயகர் ஆலய செயலாளர் அவர்களின் தலைமையில் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வில் ஆங்கில மற்றும் சிங்கள வகுப்புக்களில் பயிலும் 23 மாணவர்களுக்கான மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டது.







சிங்கள மொழி, ஆங்கிலம் பற்றிய அடிப்படை அறிவு கூட இல்லாதிருந்த நிலையில் தற்போது வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் இயலுமாக இருப்பது மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக மாணவர்கள் தெரிவித்ததோடு பாடசாலையிலும் நடாத்தப்படும் தவணைப் பரீட்சைகளிலும் சிறப்பான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதாக மாணவர்களின் பின்னூட்டல் அமைந்தது.

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது.

- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவெளி வாழும்கலை நம்பிக்கை நிதியம்
- நந்தவனம் முதியோர் இல்லம்
- புகலிடம் (சத்துணவுப் பொதிகள்)



இவ்வாறு எமது சிறுவர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு நீங்களும் உங்களால் முடிந்த உதவியை வழங்குவதன் மூலம் எமது சமூக வலுவூட்டலில் பங்களிப்பை மேற்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

## Donation – Request details

**Annai Sri Sarada Center**

**Special Meal per Day - LKR 40,000**

**Sponsor a Pre-School**

**per Month - LKR 65,000**

**Nutritious Food per Child - LKR 3,000**

**Jeevananda Girls Home**

**Special Meal per Day - LKR 20,000**

**Nandavanam Elders Home**

**Special Meal per Day - LKR 15,000**

**Sponsor a Youth**

**per Technician - LKR 10,000**

**Sponsor a Student**

**per Month - LKR 3,500**

**Nutrion Pack for Pugalidam Disables Center**

**per Pack - LKR 3,500**

**Education Materials For School students**

**per Pack - LKR 5,000**